# NSW HEALTH

## COVID-19 Key Points – Tuesday 7 September 2021

NSW GOVERNMENT

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-இலிருந்துவரும் 2021 செப்டம்பர் 7-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 1,220 கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளனர். கவலைக்கிடமாக 8 பேர் உயிரிழந்துள்ளனர்.
- தடுப்பூசியின் முதல் மருந்தளவுகளுக்கான நியூ சவுத் வேல்ஸ்-இன் சராசரி இப்போது 74% ஆகும். எங்கள் இலக்குகளை நெருங்க எங்களுக்கு உதவிய உங்கள் அனைவருக்கும் நன்றி. தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதற்கு தயவுசெய்து தொடர்ந்தும் முன்வாருங்கள். நியூ சவுத் வேல்ஸ் முடக்கத்திலிருந்து திறக்கப்பட ஆரம்பிக்கும்போது, நீங்கள் பின்னால் விடுபட்டு விடாதீர்கள். எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக, உங்கள் முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசி மருந்தளவுகளை (டோஸ்களை) பெறுவதற்கு nsw.gov.au-இல் பதிவு செய்யுங்கள்.
- எல்லா வயதினரும் மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார்கள், எனவே யாரும் கோவிட் தொடர்பாகக் கவலையீனமாக இருக்கக்கூடாது. அதிக தடுப்பூசி விகிதங்கள்தான், நோய்க்கிருமியை சமாளிப்பதற்கும், இறப்பு மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதைத் தடுப்பதற்குமான சிறந்த வழிகளாகும்.
- கில்ட்ஃபோர்ட் (Guildford), ஓபர்ன் (Auburn), மெரிலேண்ட்ஸ் (Merrylands), கிரீனேக்கர் (Greenacre), பாங்க்ஸ்டவுன் (Bankstown), லிவர்பூல் (Liverpool), யகூனா (Yagoona), பஞ்ச்பௌல் (Punchbowl), பாஸ் ஹில் (Bass Hill) மற்றும் கிரான்வில் (Granville) ஆகியவையே மிகவும் கவலைக்கிடமான பரந்த சிட்னி (Greater Sydney) புறநகர்ப் பகுதிகள் ஆகும்.
- மத்திய கரையோர (Central Coast) பகுதியிலும் அதிகமான நோய்த்தொற்றாளர்களை நாம் காண்கிறோம். தயவுசெய்து விழிப்புடன் இருங்கள், மற்றும் முன் வந்து பரிசோதனையைச் செய்யுங்கள்.
- கோவிட்-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை. தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால், தயவுசெய்து உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள். தடுப்பூசி என்பது உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாக்க உதவும் ஒரு விருப்பத்தெரிவாகும்.
- குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூகத்திடமிருந்து விடுபட்டு இருப்பது மிகவும் கடினம் என்பதை நாங்கள் அறிவோம். இப்போதைக்கு, ஒருவரை ஒருவர் விசாரித்துக்கொள்ளும் வழிகளைக் கண்டறிவோம். ஒரு தொலைபேசி அழைப்பை விடுங்கள். ஒரு குறுஞ்செய்தியை அனுப்புங்கள்.
- வீட்டிலேயே தங்கியிருப்பதுடன், தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதன் மூலம்தான் நாம் இதைக் கடந்து செல்வோம்.